# பிரமாதமான பிரமிடு பந்தல் விவசாயத்தில் பலே யுக்தி

திண்டுக்கல் மாவட்டம், மெட்டூரைச் சேர்ந்த வேலுச்சாமி (அலை பேசி: 97872 59142) அவரைக்காய் சாகுபடி செய்து கொண்டிருக்கும் இவர், அது பிரமிடு பந்தல் ஒரு சென்ட் நிலத்தில் பிரமிடு வடிவப் பந்தலை ஏற்படுத்தி, அதில் அவரை விதைத்து இயற்கை முறையில் பராமரித்து லாபம் பார்ப்பதோடு, அந்தப் பந்தலுக்குள்ளேயே ஆடு, கோழிகளையும் வளர்த்து வருகிறார் வேலுச்சாமி.



கனகாம்பரம், கடலை, மக்காச்சோளம்ன்னு வெள்ளாமை பண்ணினேன். ஆரம்பத்துல ரசாயன உரத்தையும், மருந்தையும் பயன்படுத்தினேன். 2005 ஆம் வருஷத்திலிருந்து இயற்கை முறையில விவசாயம் செய்ய ஆரம்பிச்சிட்டேன்.அவரை, திராட்சை, பீர்க்கன், புடலை, பாகல்ன்னு எல்லாவிதமான பந்தல் வெள்ளாமையையும் இந்த பிரமிடு பந்தல் மூலமா செய்யலாம். குறைஞ்ச இடத்துல மூணு மடங்கு வருமானம் கிடைக்கறதோட, உழைப்பும் குறையுது. இந்த முறையில பந்தல் அமைக்க, 5,000 ரூபாய் வரை தான் செலவு. ஒரு தடவை அமைச்சிட்டா குறைஞ்சுது பத்து வருஷத்துக்குப் பிரச்சனை இல்லை. நடைமுறையில ரெண்டு சென்ட் இடத்துல  கிடைக்குற மகசூலை, பிரமிடு பந்தல் முறையில் ஒரு சென்ட் இடத்துலயே எடுக்கலாம் என்ற நம்பிக்கையாகப் பேசியவர், தொழில்நுட்ப ரீதியிலான விஷயங்களை பாடமாகப் படித்தார்.

### பிரமிடு பந்தல் தயாரிப்பது எப்படி ?

குறிப்பிட்ட நிலப்பகுதியைத் தேர்ந்தெடுத்து 21 அடிக்கு 21 அடி அளந்து கொண்டு, ஒவ்வொரு மூலையிலும் கருங்கல் தூண்களை நடவேண்டும்.  ஒவ்வொரு தூணுக்கும் இடையில், இன்னொரு தூண் தேவைப்படும். எட்டுத் தூண்களில் இருந்தும் கம்பிகளைக் கட்டி, 60 டிகிரி கோணத்தில் இரும்புக்குழாயின் உச்சியில் அவற்றைக் கட்டவேண்டும். நன்றாகக் கட்டிவிடவேண்டும் நான்க சமபக்க முக்கோண வடிவத்தில் பிரமிடு பந்தல் தயார்.

### ஆவணிப்பட்டம் அமோகம்!

பந்தலின் நான்கு மூலைகளிலும் மூன்று அடி நீளம், அகலம் இரண்டு அடி ஆழம் கொண்ட குழியெடுத்து, மக்கிய தொழு உரத்தைப் போட்டு, விதைகளை நடவு செய்யவேண்டும். அவரையைப் பொறுத்தவரை

நடவு செய்தால், இரண்டு மாதத்தில் காய்களை எடுக்கலாம். கொடி வேலையும் குறைவு. அதிகக் காய் பிடிக்கும். மாசியில் நடவு செய்தால், காய் எடுக்க நான்கு மாதங்களாகும். வேலைப்பாடு அதிகம். ஆனால், காய்க்கு விலை அதிகமாகக் கிடைக்கும்.ஆவணியில் நடவு செய்தால், புரட்டாசியில் பந்தல் முழுக்க கொடி அடைத்துக் கொள்ளும். எழுபதாவது நாளில் காய் பறிப்புக்குத் தயாராகிவிடும். பிரமிடு பந்தல் முறையில் கொடிகளுக்கு நல்ல காற்றோட்டம் கிடைப்பதால் நோய்த் தாக்குதல் குறைவாகவே இருக்கும். ஏதாவது நோய் தாக்கினாலும் மஞ்சள்பொடி, சாம்பல் இந்தப் பந்தல் கோபுரம் போல இருப்பதால், நிழலானது ஒவ்வொரு பக்கமும் மாறி மாறி கிடைக்கும்.

குடத்தில் கொண்டு சென்று ஊற்றினால் கூட போதும. 70ம் நாளில் காய் பறிப்பு ஆரம்பித்து, ஆறு நாளைக்கு ஒரு தடவை என்று ஆழு மாதங்களுக்கு மகசூல் தொடரும். முதல் பறிப்புக்கு பத்துக் கிலோ கிடைக்கும். அது படிப்படியாக உயர்ந்து ஐந்தாவது பறிப்பின் போது 25 கிலோ வரை கிடைக்கும். மாதத்துக்கு ஐந்து பறிப்பு வீதம் 25 கிலோ அளவில் முதல் மூன்று மாதங்களுக்கு பறிக்கலாம். ஒரு சென்ட் நிலத்தில் ஒரு பட்டத்துக்கு சராசரியாக 500 கிலோ மகசூல் கிடைக்கும். அவரைக்காய் சில நேரங்களில் கிலோ 25 ரூபாய் வரைக்கூட விலைபோகும். சமயங்களில் பத்து ரூபாய் என்று குறைந்துவிடும். குறைந்தபட்ச தொகையான பத்து ரூபாயை வைத்துக் கணக்கிட்டாலே ஒரு சென்ட் நிலத்தில் 5,000 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. அதுவும் இயற்கை முறை விவசாயம் என்பதால் செலவு 500 ரூபாய்க்குள் தான் ஆகும். மற்றபடி எல்லாமே லாபம்தான்.

**அடடே ஆடு, கோழி**

கொடிகள், பிரமிடு பந்தலை அடைத்தவுடன், பந்தலுக்குள்ளேயே நல்ல நிழல் கிடைக்கும். இதில் ஆடுகளைக் கட்டி வளர்க்கலாம். கொடிகளை கவாத்து செய்துபோடும் இலைகளை ஆடுகளுக்குத் தீவனமாகக் கொடுக்கலாம். ஆடுகளின் கழிவுகளைக் கொடிகளுக்கு உரமாகப் போடலாம். ஒரு சென்ட் இடத்தில் அமைக்கப்படும் பிரமிடு பந்தலுக்குள் இரண்டு ஆடுகள் மற்றும் ஐந்து கோழிகளை வளர்க்கலாம். இதன் மூலம் நமக்குக் கூடுதல் லாபம் கிடைக்கும். விதைக்கும் சமயமாகப் பார்த்து, இரண்டு ஆட்டுக்குட்டிகளை 1,500 ரூபாய்க்கு வாங்கிவிட்டால், அறுவடை முடியும் சமயத்தில் ஒவ்வொன்றும் இரண்டாயிரம் ரூபாய் வரை விலைபோகும். 15 ரூபாய் விலையில், நாட்டுக்கோழிக் குஞ்சுகள் ஐந்து வாங்கி விட்டால், ஆறு மாதத்தில் ஒவ்வொன்றும் ஒன்றரை கிலோ அளவுக்கு வளர்ந்து விடும். கிலோ 100 ரூபாய் வீதம் விற்றால் 750 ரூபாய் கிடைக்கும். இந்த ஆறு மாதத்தில் கோழிகள் மூலமாகக் குறைந்தது 50 முட்டைகள் கிடைக்கும். நாட்டுக்கோழி முட்டை 5 ரூபாய் என்று விலைப்போகும். இதன் மூலம் 250 ரூபாய் வருமானம் கிடைக்கும். வீட்டுக்குப் பக்கத்துல சும்மா இருக்கிற ஒரு சென்ட் நிலத்தைச் சரியா பராமரிச்சா வருஷத்துக்கு 7,500 ரூபாய் வரைக்கும் வருமானம் பார்க்கலாம்.

**நடைமுறைப் பந்தலை மிஞ்சும் பிரமிடு**

நிலத்தை உழுது பார் பிடிச்சி, ஒன்றரை அடி இடைவெளியில விதையை நடணும். வரிசைக்கு வரிசை பத்தடி இடைவெளி தேவை. நாலு நாளைக்கொரு தண்ணீர்க் கட்டினாப் போதும். கொடி முளைச்சதும் ஊற வெச்ச கடலைப் புண்ணாக்கை (10 கிலோ) தண்ணியில கலந்து விடணும். 25 நாள்ல பந்தல் கொடி ஏறினதும் காம்ப்ளக்ஸ் உரம் பத்து கிலோவை தண்ணியில கலந்து விடுவேன். இடையில யூரியா ஒரு பத்து கிலோவை

தண்ணியில கலந்து விடுவேன். செடியில செல் விழுந்தா மோனோகுரோட்டோபாஸ் அடிப்பேன். ஐப்பசியில ஆரம்பிச்சி தை வரைக்கும், நிறையக் காய் கிடைக்கும். அதுக்குப் பிறகு குறைய ஆரம்பிச்சிடும். ஒரு எடுப்புக்கு 100 கிலோ காய் வரைக்கும் வருது. மொத்தமா சேத்தா சராசரியா 2,000 கிலோ ரூபாய்க்கு போட்டாலும் இருபதாயிரம் கிடைக்கும். குத்தகைப் பங்கு 5 ஆயிரம் ரூபாய் போக, 10 ஆயிரம் ரூபாய் வரும்படி கிடைக்கும்.

### 15 சென்ட் நிலத்தில் சாகுபடி செலவு வரவு

| விவரம் | செலவு | வரவு |
|---|---|---|
| உழவு | 500 | |
| விதை (அரைக்கிலோ) | 50 | |
| பார் பிடிக்க | 300 | |
| நடவு | 180 | |
| இலைக்கிள்ளக்கூலி | 660 | |
| களை | 300 | |
| கடலைப்புண்ணாக்கு | 210 | |
| உரம், மருந்து | 500 | |
| காய் எடுப்புக்கூலி | 1,200 | |
| தண்ணீர் கட்டக் கூலி மற்றும் போக்குவரத்துச் செலவு | 1,100 | |
| நில குத்தகைச் செலவு | 5,000 | |
| அறுவடை ரூ. 10 வீதம் மொத்தம் 2,000 கிலோ | | 20,000 |
| மொத்தம் | 10,000 | 20,000 |
| நிகர லாபம் | | 10,000 |

### ஒரு சென்ட் நிலத்தில் பிரமிடு பந்தல் முறையில் அவரைப் பயிரிட செலவு வரவுக் கணக்கு

| விவரம் | செலவு | வரவு |
|---|---|---|
| கல்தூண் (நான்கு) | 800 | |
| கம்பி | 2,000 | |
| மையக்குழாய், வெல்டிங் சேர்த்து | 500 | |
| பந்தல் அமைக்கக் கூலி | 1,700 | |
| ஆட்டுக்குட்டிகள் (இரண்டு) | 1,500 | |
| கோழிக்குஞ்சுகள் (ஐந்து) | 75 | |
| பராமரிப்பு | | |
| அவரை மொத்த அறுவடை ரூ. 10 வீதம் 500 கிலோ | | 5,000 |

| | | |
|---|---|---|
| ஆடு விற்பனை மூலம் | | 4,000 |
| கோழி விற்பனை மூலம் | | 750 |
| முட்டை மூலம் | | 250 |
| மொத்தம் | 7,075 | 10,000 |
| நிகர லாபம் | | 2,925 |

இதில் பந்தல் அமைக்கும் செலவு ரூ. 5,000 ஒரு முறை செய்யும் முதலீடுதான். அடுத்த ஆண்டிலிருந்து இந்த 5,000 ரூபாய் வருமானத்தில் சேர்ந்து விடும்.

**பட்டமும் அறுவடையும்**

கோழி அவரை, பெல்ட் அவரை, பட்டை அவரை என அவரையில் பல வகைகள் உள்ளன. நிலப்பரப்பிலும். மலைப்பகுதிகளிலும் இவைப் பயிரிடப்படுகின்றன. அனைத்து மாதங்களிலும் நடவு செய்யலாம் என்றாலும், ஆவணிப் பட்டம் தான் சிறந்தது. இந்தப்பட்டத்தில் நடும் போது கொடி வேகமாக வளர்ந்து, இரண்டு மாதத்தில் மகசூல் கொடுக்கும். இதுவே மாசிப்பட்டமாக இருந்தால், கொடி வளர்வதற்கு நான்கு மாதங்கள் ஆகும். ஒரு ஏக்கரில் நடவு செய்ய மூன்று கிலோ விதைகள் தேவைப்படும்.அவரையைப் பொறுத்தவரை பட்டத்துக்கு ஏற்ப அறுவடைக் காலம் மாறும். சித்திரைப்பட்டம் என்றால், 110 நாட்களில் அறுவடை ஆரம்பிக்கும். வைகாசி கடைசி அல்லது ஆனியில் அமையும் பட்டத்துக்கு 100 நாட்கள், ஆடிப்பட்டத்துக்கு 90 நாட்கள், ஆவணி அல்லது புரட்டாசிப் பட்டத்துக்கு 70 நாட்கள், மாசிப் பட்டத்துக்கு 120 நாட்கள் என்று அறுவடை அமையும்.